**இலங்கை இந்திய**

# ஒப்பந்தம் சிலருக்கே உதவியது

நாட்டின் வடக்கிலும் கிழக்கிலும் வாழ்ந்த மக்கள் தமக்கு அநீதி இழைக்கப்படுவதாக உணரத் தொடங்கினர் இதனுல் அவர்கள் வெளியாரின் உதவியோடு ஆயுதப் போராட்டத்தை நடத்த வேண்டியதாயிற்று நிலைமையைச் சாதகமாகக் கொண்டு எம்மை அழித்தொழிக்கும் முயற்சியில் பகைவர்கள் இறங்கினர். இவ்வாறு ஜனாதிபதி தேர்தலுக்கும் பொதுத் தேர்தலுக்கும் ஓராண்டு நிறைவு பெற்றதையிட்டு கம்பஹாவில் நடைபெற்ற கூட்டத்தில் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ பேசுகையில் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசுகையில் முன்னைய தேர்தல் முறை பிரதம மந்திரியையும், அவருக்கு விசுவாசமான ஒரு குழுவினரையும் கொண்டு அவர்களின் விருப்பு வெறுப்புகளுக்கேற்ப செயற்பட்டதால் பலபிரிவினைகள் ஏற்பட்டன. இத்தகைய கருத்து வேற்றுமைகளே நாட்டின் இன்றைய நிலைக்கு காரணமாகும் என்றார் புதிய தேர்தல் முறையானதுசமூகத்

—6ம் பக்கம்பார்க்க

பக்கங்கள் ஆறு — விலை ரூபா: 3·00

# முரசொலி

முரசு 05 ஒலி 15 திங்கள் 19-02-1990 (மாசி 07) ஹஜபு 22

## திங்கள், வெள்ளி ரியூட்டறி வகுப்புகளுக்கு தடை கட்டணங்கள் அறவிடுவதிலும் கட்டுப்பாடு

(காரைநகர்)

வடபகுதியில் உள்ள தனியார் கல்வி நிலையங்களில் இனி திங்கள், வெள்ளி ஆகிய நாட்களில் மாலைநேர வகுப்புகள் நடைபெற மாட்டா மாணவர்களிடம் நியாயமான கட்டணங்களே அறவிடப்படும். மாணவர் நலன் கருதியே கல்வி நிலையங்கள் இயங்கும் இவ்வாறு வடபகுதி தனியார் கல்வி நிறுவனங்களின் ஒன்றியம் தீர்மானம் மேற்கொண்டுள்ளது. வடபகுதி தனியார் கல்வி நிலையங்களின் ஒன்றியப் பொதுக்கூட்டம் நேற்று மாலை 'பொண்ட்' கல்வி நிறுவனத்தில் நடைபெற்ற போது பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தனியார் கல்வி நிறுவனங்கள் காலை நேர வகுப்புகளை 7.30 வரையே நடத்தவேண்டும். 7 30க்குப் பின்னர் எக்காரணம் கொண்டும் வகுப்புகள் நடத்தக் கூடாது. மாலைநேர வகுப்புகள் பிற்பகல் 3 00 மணி தொடக்கம் 6 30 வரையே நடத்தப்படவேண்டும். 6 30 க்குப் பின் நடத்தக் கூடாது திங்கள், வெள்ளி ஆகிய இருநாட்களிலும் மாலைநேர வகுப்புகள் நடத்தக் கூடாது. பகல் நேர வகுப்புகள் பாடசாலை செல்லாத மாணவர்களுக்கு மாத்திரம் காலை 8.00 மணி முதல்

—6 ஆம் பக்கம் பார்க்க

# புலிகளை இந்திய அரசு எதிர்த்தது

# மற்றைய குழுக்களை ஏமாற்றியது!

## கருணாநிதியிடம் தமிழ்க் குழுக்கள் முறைப்பாடு தம்மை இந்தியா கைவிட்டதாகப்புகார்

(சென்னை நிருபர்)

**இந்திய அரசானது தமிழீழ விடுதலைப் புலிகளை எதிர்த்தபோதும், மற்றைய தமிழ்க் குழுக்களை ஏமாற்றிவிட்டது என்று தமிழ்க் குழுக்களின் பிரதிநிதிகள் தமிழக முதலமைச்சர் திரு. மு. கருணாநிதியிடம் புகார் தெரிவித்துள்ளனர்**

இந்திய அரசானது இறுதி நேரத்தில் தம்மை முற்று முழுதாக கைவிட்டு விட்டதாகவும் அவர்கள் குறைபட்டுக் கொண்டனர் என்று பேச்சுக்களில் கலந்துகொண்டவர்கள் குறிப்பிட்டதாக சென்னை வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி நேற்று ஏனைய தமிழ்க் குழுக்களுடன் பேச்சுவார்த்தைகள் நடாத்தினார். ஈரோஸ் இயக்கத்துடன் தனியாகவும். ஈ. பி. ஆர். எல் எப், டெலோ, ஈ. என். டி. எல். எப், புளொட் ஆகிய இயக்கங்களுடன் கூட்டாகவும்

— 6ஆம் பக்கம் பார்க்க

## ஒரே நாளில் 20 நாய்கள் கிளிநொச்சியில் சுட்டுக்கொலை

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் வீதிகளில் அலைந்து திரியும் கட்டாக்காலி நாய்கள் சுட்டுக் கொல்லப்படும் என விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். இம் மாதம் 21-ம் திகதிக்கு முன்னர் வீட்டு நாய்களை கூட்டில் அடைத்தோ அல்லது கட்டியோ வைக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் நேற்று கிளிநொச்சி பஸ் நிலையப் பகுதியில் திரிந்த சுமார் இருபது

— 6-ம் பக்கம் பார்க்க

## ஆசிரியர் பயிலுநர் தெரிவு கிளிநொச்சியில் மேன் முறையீடு

கிளிநொச்சி மாவட்டத்தில் இருபத்தையாயிரம் பயிலுநர் ஆசிரியர்கள் தெரிவில், மேன் முறையீட்டு விண்ணப்பதாரிகள், நேர்முக பரீட்சைக்குரிய சகல ஆவணங்களையும் அவற்றின் நிழற் பிரதிகளையும் கொண்டுவருமாறு கிளிநொச்சி மாவட்ட பிரதிக்கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார்.

நாளை இருபதாம் திகதி காலை ஒன்பது மணிக்கு கரைச்சி, கண்டாவளை உதவி அரச அதிபர் பிரிவினைச்சேர்ந்

— 6 ஆம் பக்கம் பார்க்க

## தமிழ்ச்சேவை பணிப்பாளர் உரையில் வானொலியில் கலந்து கொள்ள வடபகுதி இளைஞருக்கு அழைப்பு

முன்னர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் சேவை ஒரு குறுகிய வட்டத்திற்குள்ளேயே இருந்து வந்தது. அதனை நாம் மாற்றியுள்

— 6 ஆம் பக்கம் பார்க்க

## இன்றுயாழ்மாவட்டம் முழுவதும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும்

இன்று திங்கட்கிழமை காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை திருத்தவேலைகள் காரணமாக யாழ். மாவட்டம் முழுவதும் மின்சாரம் தடைப்படும்

—6 ஆம் பக்கம் பார்க்க

## வடமராட்சி கரையோரப்பகுதி இந்திய முகாம்கள் வாபஸ்

வடமராட்சியின் கரையோரப்பகுதிகளிலுள்ள இந்தியப் படை முகாம்கள் நேற்று மூடப்பட்டன.

பருத்தித்துறை, வியாபாரிமூலை, பொலிகண்டி, வல்லிபுரம் போன்ற முகாம்களே மூடப்பட்டுள்ளன. இவர்கள் நேற்று இங்கிருந்து வளலாய்க்கு சென்றுள்ளனர்.

ஏனைய முகாம்களான மந்திகை, புலோலி, துன்னாலை, நெல்

— 6 ஆம் பக்கம் பார்க்க

## முரசொலி சேவைக்கு பாராட்டு

முரசொலியின் சேவையை முள்ளியவளை வித்தியானந்தாக்கல்லூரி அதிபரும், கொத்தணி அதிபருமான திரு. இ. தங்கராஜா பாராட்டியுள்ள

— 6 ஆம் பக்கம் பார்க்க

### இந்திய கப்பல் நடமாட்டம்

இப்மாத இறுதிக்குள் யாழ். குடாநாட்டில் இருந்து இந்தியப் படைகள் வாபஸ் பெறுவதன் அடையாளமாக பாக்கு நீரிணை பகுதியில் இந்திய கடற்படை கப்பல்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளது.

## மந்திகை வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம் இன்று சுகாதார அமைச்சரைச் சந்திக்கும்

[பருத்தித்துறை]

மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் நிலவும் குறைபாடுகள், சீர்கேடுகள் பற்றி சுகாதார அமைச்சர் திருமதி ரேணுகா ஹேரத்தை இன்று திங்கட்கிழமை ஆஸ்பத்திரி அபிவிருத்திச் சங்கம் சந்தித்து பேச்சு நடாத்தவுள்ளது,

மந்திகை ஆஸ்பத்திரி அபிவிருத்திச் சபைத்தலைவரும் மாவட்ட வைத்தி அதிகாரியுமான டாக்டர் எஸ்' கதிரவேற்பிள்ளை தலைமையிலான குழு அமைச்சரை சந்திக்கவுள்ளது.

யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் அத்தியட்சகர் திரு. என். கனகசபையையும் இதில் கலந்துகொள்ளுமாறு அமைச்சர் அறிவித்துள்ளார்.

தொலைதூரப்
பயணத்தில்
மீண்டும் எம்முடன்
சேர்ந்து நடக்க
வரும் 'ஈழநாதமே'
உனக்கு எமது
வரவேற்பும்
வாழ்த்துக்களும்

- முரசொலி


# யாழ். மத்திய கல்லூரியில் நான்கு புதிய கட்டடங்கள்

அண்மைக் காலங்களில் இடம்பெற்ற அசம்பாவிதங்களினால் பாதிப்படைந்துள்ள யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி தற்போது ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் புனரமைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இக் கல்லூரியின் நான்கு புதிய கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டன. இத்திறப்புவிழா நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக யாழ் பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பியும், சிறப்பு விருந்தினர்களாக யாழ் கோட்டக்கல்வி அதிகாரி திரு. இ. தியாகராசா, திட்டமுகாமைத்துவப் பொறியியலாளர் திரு. கே. இரத்தினம், யாழ் கல்வித்திணைக்களப் பொறியியலாளர் திரு. எம். ஏ. பிரான்சிஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களின் மகிழ்ச்சியில் மேற்படி கட்டடங்கள் விருந்தினர்களால் திறந்து வைக்கப்பட்டது. ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கிய 45 இலட்சம் ரூபாவில் தற்போது நான்கு கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. இவற்றிற்குத் தேவையான தளபாட வசதிகளின் ஒரு பகுதியை யாழ் கல்வித் திணைக்களம் வழங்கியுள்ளது.

ஆனால் மேலும் தளபாட வசதிகள் தேவைப்படுகின்றன. இதேவேளை கல்லூரியில் விளையாட்டு மைதானமும் சீரமைக்கப்பட்டு வருகின்றது. கல்வித்திணைக்களம் மேலும் இப்பாடசாலைக்கு உதவிகள் வழங்கவேண்டும் என்று பாடசாலை நிர்வாகமும் பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் நன்றியுடன் எதிர்பார்க்கிறது.



மேலே உள்ள படத்தில் நேற்றுமுன்தினம் திறந்துவைக்கப்பட்ட யாழ். மத்திய கல்லூரியின் ஆரம்பப் பிரிவு பாடசாலையின் கட்டத்தையே காண்கின்றீர்கள்.

## முல்லை வைத்தியசாலைக்கு மின் உபகரணம் அன்பளிப்பு

(மாங்குளம்)

முல்லைத்தீவு தனியார் போக்குவரத்துச்சங்கம் முல்லைத்தீவு அரசினர் வைத்தியசாலைக்கு 30 000/ரூபா பெறுமதியான மின்சார உற்பத்தி இயந்திரத்தை வழங்கியுள்ளது.

மின்சாரம் தடைப்படும் நேரத்தில் நோயாளிகளுக்கு உடனடி சிகிச்சையை ஏற்படுத்தக்கூடிய வகையில் தனியார் போக்குவரத்துச் சங்கச் செயலாளர் திரு ஆ சிவனேஸ்வரன் அரசினர் வைத்தியசாலை அதிகாரியிடம் இலசவமாக வழங்கியுள்ளார்.

## யாழ். லயன்ஸ் கழகச் சேவைக்கு தேசிய ஆளுநர்கள் பாராட்டு

யாழ். மாவட்ட லயன்ஸ் கழகங்களின் கருத்தரங்கொன்றில் பங்குபற்ற யாழ்ப்பாணத்திற்கு விஜயமொன்றை மேற்கொண்ட லயன்ஸ்கழக முன்னாள் மாவட்ட ஆளுநர்கள் லயன் தயாவிக்கிரமதுங்காவையும், லயன் சுனில் வற்றவளையையும் தற்போதைய 306 பி,மாவட்டஆளுநர் லயன் பிரேமச்சந்திர பத்திரணவையும் அவர் பாரியாரையும், யாழ். லயன்ஸ்கழகம் மாசி மாதம்11ஆம் திகதிஞாயிற்றுக்கிழமை சுபாஸ் சுற்றுலாவிடுதியில் ஒரு தேநீர்விருந்துவைபவத்தில் வரவேற்றுக் கௌரவித்தது. இந்த வைபவத்திற்கு யாழ். லயன்ஸ் கழக தலைவர் வைத்திய கலாநிதி வே. யோகநாதன் அவர்கள் தலைமை தாங்கினார்கள். பரஸ்பர நல்லெண்ணக் கருத்துக்கள் பரிமாறப்பட்டன. யாழ். லயன்ஸ் கழகம் இக்கட்டான சூழ்நிலையிலும் மனித சமுதாயத்திற்கு ஆற்றிவரும் சேவையை விருந்தினர்கள் மனமுவந்து பாராட்டினார்கள்.

யாழ். லயன்ஸ் கழகம் இவ்வைபவத்தில் திருநெல்வேலி முத்துத்தம்பிபிள்ளைகள் பராமரிப்பு நிலையத்திற்கு ரூபா 2,500/- பெறுமதியான கொப்பி, பென்சில் போன்ற உபகரணங்களையும், உரும்பிராய் ஞானசம்பந்தர் சிறுவர் இல்லத்திற்கு ரூபா. 3,000/- பெறுமதியான சமையல் உபகரணங்கள், சாப்பாட்டுக் கோப்பைகள், தேநீர்க் கோப்பைகள் முதலியவற்றை அன்பளிப்பாக வழங்கினார்கள்

யாழ் லயன்ஸ் கழகம் கிளிநொச்சி, பூநகரி, பளை போன்ற அரசினர் வைத்தியசாலைகளுக்கு ரூபா. 20,000/- பெறுமதி வாய்ந்த வைத்திய உபகரணங்களையும் யாழ். மாவட்ட நாடக விளையாட்டுக் கல்லூரிக்குப் பெறுமதி வாய்ந்த ஒலிப்பதிவு நாடாக்களையும் அன்பளிப்புச் செய்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. மேலும் கண்பார்வையற்றவர்களுக்கு இலவச கண்ணாடி வழங்கும் தொண்டினையும் இக்கழகம் மேற்கொண்டு வருகிறது, இற்றைவரை 300க்கு அதிகமான கண்ணாடிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டதாக லயன்ஸ் கழகத்தலைவர் தெரிவித்தார்.

## மானி. இந்துவில் மதிய போசனவிருந்து

(மானிப்பாய்)

மானிப்பாய் இந்துக்கல்லூரி உயர்தர மாணவமன்றத்தின் வருடாந்த மதிய போசன விருந்து எதிர்வரும் 25-ம்திகதி ஞாயிற்றுக்கிழமை கல்லூரி மண்டபத்தில் மன்றத்தின் தலைவர் எஸ் ஜெகதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. இவ்வைபவத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவபீட உடற்கூற்றியல் தலைவர் வைத்திய கலாநிதி ஆர் ஆர் பிரசாத் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.


## சிறு விளம்பரம்

### புத்தகம்

K. டானியலின் புதிய வெளியீடு தண்ணீர் 45/-. குறுநாவல்கள் 45/- விற்பனையாளர்கள் பூபாலசிங்கம்புத்தகசாலை யாழ்ப்பாணம். 02182

### கல்வி

விற்பனையாகிறது! சமூகக் கல்வி ஆண்டு 11 (திருத்திய புதிய பாடத் திட்டம்) ஆக்கியோன் ந. தர்மபாலன் சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். 02172

### தேவை

யாழ். இந்து வேளாளர் உயர்குலத்தைச் சேர்ந்த பெற்றோர், 34 வயது நிரம்பிய லண்டனில் வசிக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக B.Sc பட்டதாரியும், CIMA கணக்காளருமாகிய மகனுக்கு அதே குலத்தைச் சேர்ந்த உகந்த மணமகளைத் தேடுகின்றனர். CIMA கணக்காளர் அல்லது Stage 2 சித்தியடைந்தவர்கள் மாத்திரம் சாதகம், மற்றும் முழு விபரங்களுடன் தொடர்பு கொள்க. விளம்பர இல. 286, C/o முரசொலி ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 02205



## இரண்டாவது ஆண்டு நிறைவு



## செல்வன் ஏ. கே. முரளிதரன் (லெப். கேணல் பிரசாத்)

தமிழீழ விடுதலைப் புலிகளின்
முன்னாள் யாழ்ப்பாண மாவட்ட
அரசியற் பொறுப்பாளர்
யாழ்ப்பாணக்கல்லூரிப் பழைய மாணவன்

உண்டியுடன் மதுபானம்; உல்லாசம்; கேளிக்கை
கண்டிருந்தார் உணரார் களப்பலியை!-பெண்டிரோடு
அலியேறும் அரங்கென்று, அறிவிலிகள் நினைத்தார்கள்?
புலியேறும் அரங்கிலவர் புழு!

●

நித்திரை விழித்து உன்னை
நித்தமும் வளர்த்த ஈழ
முத்திரை பதித்த அங்கம்
முரளீ தரன் என்னும்
பத்தரை மாற்றுப் பொன்னு,
பாடையிற் படுத்துப் போகும்?
இத்தரை மீதில் யானும்
இரங்கலைக் கவிதை செய்தோம்!

●

கண்களில் நிறைந்த தீர்க்கம்;
கருத்திலே ஆண்மை நோக்கம்;
கொண்டுநீ பாயும் வெள்ளம்;
கொள்கையில மாறா வுள்ளம்;
வண்டுபோற் பறந்த திங்கே!
வாழ்வினை முடித்த தெங்கே?
கண்டுவா உடனே என்று,
கவிதையில் இதயம் வைத்தோம்!

●

கத்தினோம் எங்கள் சொத்தைக்,
காலமேன் கவர்ந்து போகும்?
புத்திநாம் குழம்பி இங்கே,
புலம்பலைக் கண்டபின்னும்;
சித்தியேன் எய்தவில்லை,;
சீக்கிரம் எமது தேசம்?
தத்தினோம் தமிழை நாடி;
தனிமையிற் சாந்தி வேண்டி!

●

நெஞ்சிலே விளைந்த வித்து!-நம்
நேரில் எழுந்து சத்து!
பிஞ்சிலே களங் களாடும்-பின்
பிணமென விழுந்து பாடும்!
கொஞ்சியே அணைத்த சுற்றம்-இனிக்
கொட்டிய குருதி வற்றும்!
வஞ்சியே! தமிழே! கொஞ்சம்-நின்
வாசலில் வருவோம் தஞ்சம்!

●

திங்கள் பலவோடித்தீயில் உயிர் திணித்தோம்!
எங்கள் மூச்சென்ன எளிதோ? - உங்கள்
தீர்ப்பறிந்தோம்: திகைத்தோம்; தீகக்கும் எரிமலையாய்
ஆர்ப்பரிக்கும் எங்கள் அணி!

இவ் வண்ணம்
வட்டுக்கோட்டை, உறவினர்கள் நண்பர்கள்
ஈழம்.
18-02-1990

2204

## ஏன் இந்த அசமந்தம்?!

உணவு முத்திரையில் மோசடி செய்து தவறான தகவல்கள் மூலம் கள்ளமாக முத்திரை பெற்றுவந்தவர்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர்.

மொத்தம் அறுபத்தையாயிரம் பேர் இவ்வாறு கண்டு பிடிக்கப்பட்டனர்.

இவர்கள் யாவரும் முதலாம் கட்ட ஜனசக்தித் திட்டம் அமுல் செய்யப்பட்டபோது கண்டு பிடிக்கப்பட்டனர்.

மேலும் மேலும் ஜனசக்தித் திட்டம் கட்டம் கட்டமாக அமுல் படுத்தப்படின் பதினைந்து லட்சம் பேர் கள்ளமாக உணவு முத்திரை பெறுவது கண்டுபிடிக்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் அனைவரும் தாம் வறுமைக் கோட்டில் உள்ளவர்கள் என்று பொய்க் காரணங்களைக் கூறி உணவு முத்திரை பெற்று வருகின்றனர்.

தொழிற்சாலை, லொறி, காணிகள், வெளிநாட்டில் உள்ளோரும் உணவு முத்திரை பெறுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அரசின் உயர்மட்ட அதிகாரி ஒருவரும் தமது பெற்றோரின் பெயரில் உணவு முத்திரை பெற்றிருப்பது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

இதேசமயம் பலர் உணவு முத்திரை பெறத் தகுதி இருந்தும் உணவுமுத்திரை பெற முடியாதுள்ளனர்.

இவர்களுக்கு இன்னமும் புதிதாக உணவு முத்திரைகள் வழங்கப்படவில்லை.

# இதயநாதம்

திங்கட்கிழமை 19 - 02 - 1990

அரசியல் அதிகாரங்களை கையில் வைத்திருப்பவர்களை விட அதிகாரத்திற்கு வெளியே இருப்பவர்களிடம் தான் உண்மையான அதிகாரமும் செல்வாக்கும் இருக்கின்றன

காந்தியடிகள்

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

யாழ் மாவட்டத்தில் ஜனசக்தித் திட்டம் தற்போது செயற்படுத்தப்பட்டு வரும் யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மட்டுமே புதிய உணவு முத்திரைகள் வழங்கப்படுகின்றன.

மற்றய உ. அ. அதிபர் பிரிவுகளில் பெருந்தொகையான மக்கள் தகுதியிருந்தும் உணவு முத்திரை பெற முடியாதுள்ளனர்.

இதேசமயம் பெருந்தொகையானோர் இவ்விடங்களில் தகுதியில்லாது உணவு முத்திரை பெற்று வருகின்றனர்.

ஜனசக்தித் திட்டம் கட்டம் கட்டமாக அப்பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்படும் போது தான் அப்பகுதி மக்களுக்குப்புதிய உணவு முத்திரைகள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இரண்டாம் கட்ட ஜனசக்தி செயற்படுத்தல் வரும் மே மாதமே நடைமுறைப்படுத்தப்படும் என்று தெரியவருகிறது.

இந்நிலையில் ஏழாம், எட்டாம் கட்டமாக ஜனசக்தி பெறவுள்ள பகுதிகளில் உள்ளவர்கள் ஜனசக்தித் திட்டத்தின் கீழ் பயன் பெற இன்னமும் பல மாதங்கள் (ஏன் சில ஆண்டுகள்கூட) எடுக்கலாம்.

அதுவரை பொய்த்தகவல்கள் மூலம் கள்ளமாக உணவு முத்திரை பெறுவோர் தொடர்ந்தும் பெற பெற அரசு அனுமதியளிப்பதா.

இன்னமும் பதினைந்து லட்சத்திற்கு மேற்பட்டோர் கள்ளமாக உணவு முத்திரை எடுக்கின்றனர்.

இவர்களை அதுவரை தொடர்ந்து அனுமதிப்பதா?

இதேவேளை தகுதியுள்ளோர் அதுவரை உணவு முத்திரைக்காகத் தவம் கிடப்பதா?

இது விடயத்தில் அரசு உடன் கவனம் எடுக்க வேண்டும்.

தற்போது ஜனசக்தித் திட்டத்திற்காக சகல பிரிவிலும் பதிவு வேலைகள் முடிந்து விட்டன.

எனவே ஜனசக்தித் திட்டம் செயற்படுத்தப்படும்வரை காத்திராமல் இப்போதுள்ள ஜனசக்திப் பதிவுகளைக் கொண்டு கள்ளமாக உணவு முத்திரை பெறுவோரை நிறுத்த முடியும்.

இதேபோல் தகுதியிருந்தும் புதிய உணவு முத்திரை பெறாது உள்ளோருக்கு ஜனசக்தி செயற்படுத்தப்படும் வரை காத்திராமல் உடன் உணவு முத்திரையை வழங்கலாம்.

# ரஜனீஷ்பிறக்கவில்லை இறக்கவில்லை

# பூமிக்கிரகத்தைப் பார்வையிட்டார்

செக்ஸ் சுவாமியார் அடுத்தவர்களைச் சீண்டுவதன் மூலமும், சாடுவதன் மூலமும் தன்மீது பிறரின் கவனம் திரும்பும் என்பதைப் புரிந்து கொண்டார். அதன் பின்னர் இயேசுக்கிறிஸ்து முதல் மகாத்மா காந்திவரை மொரார்ஜியில் இருந்து ராஜீவ் காந்திவரை அனைவரையும் கண்டனம் செய்தார். அவரது வார்த்தைகளில் அன்னை திரேசா அபாயகர திரேசாவானார். அயத்துல்லா பைத்தியமானார். போப்பாண்டவர் பாமரரானார்.

அதிகம் அறியப்படாத குச்வாடா என்ற ஊரில் தோன்றிய பகவான் கடைசி நேரத்தில் சொன்னார் ''உங்களுக்கு என் கனவை விட்டுச்செல்கிறேன்''. அடுத்தநாள் காலை கட்டுக்கடங்கா மகிழ்ச்சி(அது அவர் விருப்பம்) கலந்தவருத்தத்துடன், அவர் உடல் அவசர அவசரமாகத் தகனம் செய்யப்பட்டது. ஆனால், ரஜனீஷ் — சோர்பா — ஓஷோ என்று அழைக்கப்பட்ட அந்த மனிதனின் கனவு என்னஎன்று யாராலும் சொல்லமுடியாது. அது தியானம் மூலம் மோட்சமா? அல்லது செக்ஸ்மூலம் நிர்வாணமா? மனம்போன போக்கில் போவதன் மூலம் சுதந்திரமா? அல்லது மனம் போக்கில் போவதற்காகச் சுதந்திரமா? ரோல்ஸ்ராய்சின் அழகா? அல்லது உலகத்தின் உண்மையா? எப்போதும் மாறிக்கொண்டேயிருக்கும் தனது அவதாரம்,வழி முறைகள் இவற்றால்தன்கட்டுக்குள் வைத்திருக்கும் பக்தகோடிகளிடம் உதிர்க்கப்பட்ட கடைசி ஜோக்கா?

அது எது என்பதல்ல முக்கியம். அவர் உயிரோடுஇருந்த போது உடல் பொன் இரண்டையும் அர்ப்பணித்து ஆயிரக்கணக்கானோர் வாங்கிய கனவு அது. அவர் இறந்தபோதும் அதில் மாற்றம் இல்லை. பகவான் உத்தரவிட்டதுபோல் காவியுடை அணிந்த ஆயிரக்கணக்கான சன்னியாசிகள், பூனாவின் தெருக்களில் அவரது மறைவைக் கொண்டாடி நடனமாடினார்கள். ஆனால், இந்தக் கொண்டாட்டங்களுக்கு அப்பால் அவரது உடம்புக்கு என்ன? அவர் ஏன் அவசரமாகத் தகனம் செய்யப்பட்டார். அவரது பக்தகோடிகளின் எதிர்காலம் என்னாகும் என்ற சீரியசான கேள்விகள் எழுகின்றன. அமெரிக்கச் சிறையில் அவருக்குக் கொடுக்கப்பட்ட, மெதுவாகச் கொல்லும் விஷத்தினால்தான் அவர் இறந்தார்என்றுசன்னியாசிகள் அழுத்திச் கூறுகிறார்கள். மரணத்திற்குப் பிந்திய உடற்கூறு அறிக்கை இல்லாததால் இந்த வாதத்தை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

அவரது ஆசிரமங்கள் உருவாக்கிய செக்ஸ் பற்றிய சர்ச்சைகளுக்கும் அப்பால், அவர் மெத்தப் படித்த மனிதர் என்பதை அவரைக் கிண்டலடிக்கும் பொறாமைக் கூட்டம் மறந்து விடுகிறது. ஒரு நாளைக்கு இரண்டாயிரம் பக்கங்கள் படிக்க முடிந்த புத்தகப் பிரியர். தான் படித்தவற்றை இந்த அத்தியாயம், இந்த வரி என்று அட்சரம் பிசகாமல் மேற்கோள் காட்டும் ஞாபக சக்தி கொண்டவர். ரஜனீஷை 'இந்தியாவின் சிறந்த சுயமான சிந்தனைவாதி' என்கிறார் குஷ்வந்த்சிங். இவர்தோன்றிய நேரம், இவர் தன் கொள்கைகளைக் கடை விரித்த விதம் தான் இவருக்குச் சீடர்களை ஏற்படுத்தியது. நாத்திகத்தின் எக்சிஸ்டென்ஷியலிச இருப்பியல்வாதம் இலக்கியத்தின் யுகமான இருபதாம் நூற்றாண்டில் ஹிப்பிகளும் பீட்டில்ஸ்களும் உருவான நேரத்தில் ரஜனீஷ் இங்கு இப்போது என்ற ஒரு ஆனந்த தத்துவத்தை 'போனால் போகட்டும்' என்ற சித்தாந்தத்தைக் கடைவிரித்தார். ஒருவேளை அவர் இதனை நம்பியிருக்கலாம், அல்லது ஒருவேளை மனம்போன போக்கில் எதையும் செய்யும் காலத்தில் தங்களது 'விடுதலைக் காதலினால்' ஏற்பட்ட குற்ற உணர்வைப் போக்க ஏக்கத்துடன் மேலைநாட்டு மக்கள் தேடிவந்த நிம்மதியை அளிக்க இவை சரியான கருவி என்று கருதியிருக்கலாம்.

அமெரிக்காவில் இருந்த ரஜனீஷின் அழகான முதன்மை உதவியாளர் மா ஆனந்த் ஷீலா 'எங்களுக்கு விளம்பரம் என்றால் பிடிக்கும். அது நல்லதாக இருந்தாலும் சரி,கெட்டதாக இருந்தாலும் சரி' என்று எப்போதும் பெருமையுடன் சொல்வார்.

ஆரம்ப நாட்களிலேயே ரஜனீஷ் சந்திரமோகன் இந்த உண்மையைப் புரிந்துகொண்டிருந்தார். ஒரு ஜெயின்துணி வியாபாரியின் பதினொரு குழந்தைகளில் மூத்தவரான ரஜனீஷ், கலகத்தைப்போல் அனைவரது கவனத்தையும் வேறு எதுவும் கவராது என்பதைத் தனது குழந்தைப் பருவத்திலேயே கண்டு கொண்டார். அதிகாரத்தின் மீது கேள்வி எழுப்பினார். தியானத்துடன் பரிசோதனைகள் செய்தார். 1953-ம் ஆண்டு மார்ச் 23-ம் தேதி ஜபல்பூரில் தத்துவம் படித்துக்கொண்டிருந்தபோது 21 வயது ரஜனீஷ் தனக்கு ஞானம் வந்து விட்டதாகக் கூறினார். ஆனால், அது மட்டும் போதாது: தன்னுடைய 'செய்தி' பரப்பப்பட வேண்டும்.

இவரது முக்கியமான காலகட்டங்கள்; 1966-ம் உள்மனத்தை எழுப்புதல். 1968–ல் செயல்திறம் மிகுந்த தியானம். 1969-ல் பம்பாயில் முதன்முதலாக தீட்சை வழங்கியது. அடுத்தவர்களைச் சீண்டுவதன் மூலம், சாடுவதன் மூலம் தன் மீது கவனம் திரும்பும் என்பதைப் புரிந்துகொண்டார். அதன் பின்னர் இயேசு கிறிஸ்து முதல் மகாத்மா காந்தி வரை, மொரார்ஜியில் இருந்து ராஜீவ்காந்தி வரை அனைவரையுப் கண்டனம் செய்தார். அவரது வார்த்தைகளில் அன்னை திரேசா, அபாயகர திரேசாவானார். அயத்துல்லா பைத்தியமானார். போப்பாண்டவர் பாமரரானார்.

இருந்தும், எல்லோரையும் போலவேரஜனீஷிற்கும் விளம்பரம் என்பது இரு முனை ஆயுதமாயிற்று. அவை, அவருக்கு வெளிச்சம் தருவதாக மட்டுமல்ல செக்ஸ் சாமியார் என்று சித்தரிக்கவும் பயன் பட்டது. சிறைச்சாலைவரை, துரத்தியது. பூனாவில் கோரேகான் பார்க்கிலுள்ள அவரது ஆச்சிரமத்தை செக்ஸ் மூலம் ஆத்மாவைக் கண்டறியும் ஜாலி நபர்களின் முகாமாகக் கண்ட உள்ளூர்வாசிகள் அதை ஆத்திரத்துடன் முற்றுகையிட்டனர். மேலைநாட்டு சன்னியாசிகள் வந்து குவிய, உள்ளூர் வாசிகள் வெளியேற்றப்பட ஆத்திரம் வலுத்தது. விடுதலைக் காதல் உபதேசி, இந்திய அரசை சபித்து விட்டு இனிமேல் திரும்பிவரப்போவதில்லை என்று சபதம் செய்து 1981-ம் ஆண்டு மே 31-ம் தேதி திடீரென்று தமது நெருங்கிய தொண்டர்களுடன் அமெரிக்காவிற்குக் கிளம்பும் அளவிற்கு அது வளர்ந்தது.

அவரது கடவுளின் தூதர் பணியின் உச்சமாகவும், வீழ்ச்சியாகவும் அமைந்தது அமெரிக்க ஒரேகானில் அவர் அமைத்த 64229 ஏக்கர் ராஞ்சோ ரஜனீஷ் பண்ணை.

காவியுடை தரித்த சீடர்கள் தங்கள் குருவை பிசினஸ் சின்னமாக்கினர். செழுமையான பண்ணையில் ஒட்டல்கள்,நைட் கிளப்புகள், அவருடைய உரைகள் இடம்பெற்ற ஒடியோ, வீடியோ கசெட்டுகள் ஆச்சிரமத்தை வளமாக்குவதற்கென்றே எழுதப்பட்ட 650 புத்தகங்கள் ஆகியவை உருவாயின. விற்பனையும் சேர்ந்து கொண்டது: இயேசு சேமிக்கிறார், மோசஸ் முதலீடு செய்கிறார், பகவான் செலவழிக்கிறார் என்று பொருளாசையை வெட்கமற்றுத் தம் பட்டமடிக்கும் ஸ்டிக்கர்களும் வெளியிடப்பட்டன.

மா ஆனந்த் ஷீலா மனம் மாறி, ரஜனீஷ்புரத்திலிருந்தே வெளியேறி ரஜனீஷைக் குற்றம் சாட்டினார். ரஜனீஷ் 'சுப்பர்ஃபிராட்' என்றார். தனது பார்வையாளர்களை மெய்மறக்கச் செய்யப் போதை மருந்துகளைப் பயன்படுத்தினார் என்று சொன்னார். சிறைக் கம்பிகளுக்குப் பின்னால் 17 நாட்கள் இருந்த ரஜனீஷ், மன்னிப்புப் பேரத்தைப்' பயன்படுத்தி, 48 லட்ச ரூபாய் அபராதம் கட்டி, அந்த நாட்டை விட்டே வெளியேற ஒப்புக்கொண்டார்.

ஒவ்வொரு நாடாக அவருக்கு அனுமதி மறுக்க, அவமானம் அதிகரித்தது. எனவே இந்தியா திரும்பி பூனாவில் கோரேகான் பார்க்கில் சென்று இறுதியாகத் தங்குவதற்கு முன்பு மணாலியின் குளுமையில் ஒதுங்கினார்.

அவரது கடைசிசில ஆண்டுகளில் தனது பெயரையே கூட ரஜனீஷ் என்பதிலிருந்து சோர்பா என்றும். பின் ஓஷோ என்றும் மாற்றிக் கொண்டார்.

அவரதுமரணத்திற்குப் பின் குழப்பம் ஏற்படத் தொடங்கியிருக்கிறது தனது வாரிசு என்று அவர் நியமனம் செய்த 20 உறுப்பினர்கள் கொண்ட 'உள் வட்டம்'மர்மமாக இருக்கிறது. வாயைத் திறப்பதில்லை. ஏதாவது தகவல் தெரிந்தால் சொல்லும்படி நிருபர்கள், சன்னியாசிகளை வேண்டுகிறார்கள். வட்டத்தின் தலைவர் ஜெயேஷ், பிடிகொடுக்காமல் நழுவுகிறார். வட அமெரிக்கர்களுக்கும், (ஒரேகான்நாட்களில் சேர்ந்தவர்கள்) ஜெர்மனியர்களுக்கும் (பெரும்பான்மையான தொண்டர்கள்) பதவிப் போராட்டம் இப்போது நடப்பதாகக் கூறப்படுகிறது.

இதற்கிடையில் வழிபாடு ஆரம்பித்துவிட்டது. அவர் வாழ்ந்த 'லாவோது' இல்லத்தில் உள்ள ஓஷோ தீர்த்தம்" எனப்படும் சமாதியில் கீழ்க்கண்டவாறு எழுதப்பட்டிருக்கிறது.

'ஓஷோ பிறக்கவுமில்லை, இறக்கவுமில்லை. 1931, டிசம்பர் 11-ம் தேதியிலிருந்து 1990, ஜனவரி 19 வரை, பூமி கிரகத்திற்கு வந்து பார்வையிட்டார்.

அமெரிக்கச்சிறையில் இருக்கும்போது ரஜனீஷ் சுவாமியாருக்கு கொடுக்கப்பட்ட. மெதுவாகக் கொல்லும் விஷத்தினால்தான் அவர் இறந்தார் என்று சன்னியாசிகள் அழுத்திக் கூறுகின்றார்கள்.

ரஜனீஷ் சுவாமியார் மறைந்து சில தினங்களுக்குள்ளேயே அவரை வேண்டி வழிபாடுகளும் ஆரம்பித்து விட்டது. அவர் வாழ்ந்த 'லாவோது' இல்லத்தில் உள்ள 'ஓஷோ தீர்த்தம்' சமாதியில் ''ஓஷோ பிறக்கவுமில்லை. இறக்கவுமில்லை. 1931 டிசம்பர் 11 - ம் திகதியிலிருந்து 1990 ஜனவரி 19 வரை பூமிக் கிரகத்திற்கு வந்து பார்வையிட்டார்'' என எழுதப்பட்டுள்ளது.

## முரசொலிக்கு வந்த கடிதம்

## 'நிதர்சனம்' ஒளிபரப்பாகுமா?

ஆசிரியர்
முரசொலி
ஐயா,

கிட்டத்தட்ட இரண்டரை வருடமாக ஒளிபரப்பப்படாமல் இருக்கும் 'நிதர்சனம்' மீண்டும் ஒளிபரப்பாகுமா? இச்சேவையானது தமிழீழ விடுதலைப் புலிகளினால் நடாத்தப்பட்டது. இவ் ஒளிபரப்பு இந்திய இராணுவத்துடன் ஏற்பட்ட மோதல்களையடுத்து நிறுத்தப்பட்டு விட்டது. தற்போது இந்திய இராணுவம் எம் நாட்டை விட்டு விலகி வருகிறார்கள். இப்போது விடுதலைப் புலிகள் மக்கள் முன்னிலையில் மீண்டும் சுயமாக இயங்குகிறார்கள். எனவே அவர்கள் தமது நிதர்சன ஒளிபரப்பை மீண்டும் அறிமுகப் படுத்துவார்களா?

இந்த ஒளிபரப்பை ஏக காலத்தில் வடபகுதி முழுவதுமுள்ள மக்கள் பார்க்க ஒழுங்கு செய்யப்படுமா?

யாழ்ப்பாணம்

இப்படிக்கு
S. நடராசா

## ஆசனப் பதிவுக் கட்டணம் எதற்காக அறவிடப்படுகின்றது?

ஆசிரியர்
முரசொலி
ஐயா,

யாழ். மட்டக்களப்பு பிரயாணிகளின் நலன் கருதி விசேட பஸ் சேவைகளை நடாத்தும் வடபிராந்திய கிழக்குப் பிராந்திய போக்குவரத்துச் சபைகளுக்கு பாராட்டுத் தெரிவிக்கும் அதே வேளை இச்சேவையில் உள்ள சில குறைபாடுகளையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மட்டக்களப்பு - யாழ்ப்பாணம் ஒரு வழிப்பாதைக்கு ரிக்கற் பணமாக நூறு ரூபாவும், ஆசனப் பதிவுக் கட்டணமாகப் பத்து ரூபாவும் அறவிடப்படுகிறது. முழுத் தொகையான நூற்றிப் பத்து ரூபாவும் பதிவு செய்யும் தினத்திலேயே அறவிடப்பட வேண்டும். யாழ். மட்டக்களப்பு சாதாரண பஸ் கட்டணம் 52 ரூபாவாக இருக்கும் போது விசேட பஸ் கட்டணம் நூறு ரூபா அறவிடப்படுகிறது. அத்துடன் ஆசனப்பதிவு எனப் பத்து ரூபா எதற்காக அறவிடப்பட வேண்டும்? தனியார் பஸ்களில் ஆசனப்பதிவு செய்யும் போது ரிக்கற் கட்டணம் என்றும் ஆசனப்பதிவுக் கட்டணம் என்றும் இருவேறு கட்டணங்கள் அறவிடப்படுவதில்லையே...

ஆகவே விசேட பஸ் கட்டணமாக ஒரு வழிப் பாதைக்கு நூறு ரூபா மட்டும் அறவிடப்படுவதே நியாயமானது மேலதிகப் பத்து ரூபா அறவிடப்படுவது நிறுத்தப்பட வேண்டும். இதே சமயம் சிலவேளைகளில் இந்த விசேட பஸ்களில் அளவுக்கதிகமான பிரயாணிகள் ஏற்றப்படுகின்றனர். சிறிய தரிப்பிடங்களிலும் சிலர் ஏற்றப்படுகின்றனர். இவை மட்டுப்படுத்தப்பட வேண்டும்.

மட்டக்களப்பு

து. கௌசிகன்


## கனடாவில்
### வேலைவாய்ப்புக்கள்

| | VACANCIES | | SALARY | |
|---|---|---|---|---|
| 1. | கணக்காளர்கள் | Accountants | 1170 | CD |
| 2. | கணக்குப்பதிவாளர்கள் | Book-Keepers | 900 | CD |
| 3. | இரசாயனவியலாளர்கள் | Chemists | 960 | CD |
| 4. | எழுதுவினைஞர்கள் | Clerks | 840 | CD |
| 5. | சாரதிகள் | Drivers | 850 | CD |
| 6. | பொறியியலாளர்கள் | Engineers | 1340 | CD |
| 7. | எலெக்ரீஷியன்கள் | Electricians | 1110 | CD |
| 8. | போர்மன்கள் | Foremen | 1020 | CD |
| 9. | தொழிலாளர்கள் | Labourers | 750 | CD |
| 10. | மெக்கானிக்குகள் | Machinists | 800 | CD |

நேர்முகப் பரீட்சையின் பின் 3 வருட விசாவுடன் கூடிய தொழில் அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். முற்பணம் அறவிடப்படமாட்டாது. விண்ணப்பப்படிவங்களுக்கும் ஏனைய விபரங்களுக்கும் நேரில் தொடர்பு கொள்ளவும்.

விண்ணப்ப முடிவுத்திகதி 28. 2. 1990

AXONT AGENCY
370, Point Pedro Road
Anaipanthi
Jaffna.
[வீரமாகாளி அம்மன் கோவிலுக்கு அருகாமையில்]

02191


## ஜே. வி. பி. முகாம் முற்றுகை

ஹொரவப்பொத்தானையில் ஜே. வி. பியினரின் முகாம் ஒன்றை பொலிஸார் முற்றுகையிட்டனர். முற்றுகையின் போது பெருந்தொகையான ஆயுதங்கள் தோட்டாக்கள், பொலிஸ் இராணுவ சீருடைகள் றோஹணவின் பேச்சுக்கள் அடங்கிய ஒலிப்பதிவு நாடாக்கள் என்பன கைப்பற்றப்பட்டன.

## லஞ்சம் வாங்கி பிடிபட்டனர்

சட்டத்தரணி ஒருவரும், தேசியலொத்தர்சபை லிகிதர் ஒருவரும் லஞ்சக் குற்றச்சாட்டின் மீது கைது செய்யப்பட்டனர். மத்திய வங்கியில் வேலை பெற்றுத் தருவதாக இவர்கள் லஞ்சம் பெற்றதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

## ஆழியவளை பஸ்சேவை பாதிப்பு

[முள்ளியான்]

யாழ்ப்பாணம் - ஆழியவளை பஸ்சேவை கடந்தசில நாட்களாக மிகவும்பாதிப்பு அடைந்துள்ளது. இதனால் வடமராட்சி கிழக்குப்பகுதிமக்கள் பலவித கஷ்டங்களுக்கு உள்ளாகிவருகிறார்கள். கடந்த சில நாட்களாக யாழ்ப்பாணத்தில் இருந்து ஆழியவளைக்கு எந்த ஒரு சேவையும் நடத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. சில வருடங்களுக்கு முன்னர் ஏழு, எட்டு சேவைகள் யாழ்ப்பாணத்தில் இருந்து ஆழியவளைக்கு நடாத்தப்பட்டன. பின்னர் இச் சேவைகள் குறைக்கப்பட்டு மூன்றுசேவைகளாக்கப்பட்டன. அண்மையில் அதுவும் நிறுத்தப்பட்டதாகப் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

இந் நடவடிக்கை காரணமாக வடமராட்சி கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள தாளையடி, மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை, ஆழியவளை, வெற்றிலைக்கேணி கட்டைக்காடு, சுண்டிக்குளம் ஆகிய கிராமங்களில் உள்ள மக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளார்கள்.

## புதிய பாதுகாப்புச்செயலர்

புதிய பாதுகாப்பு அமைச்சின் செயலகளராக அண்மையில் ஓய்வு பெற்ற விமானப் படைத்தலைவர் வோல்டர் பெர்ணன்டோ நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்த ஜெனரல்சேபால ஆட்டிக்கல தமது பதவியில் இருந்து ஓய்வுபெற்றதையடுத்தே இப்பதவிக்கு வோல்டர் பெர்ணன்டோ நியமிக்கப்பட்டார்.

ஜெனரல்சேபால ஆட்டிக்கல இலங்கையின் இங்கிலாந்துக்கான தூதுவராக நியமனம் பெறவுள்ளார்.

## புதிய கொத்தணி

(பூநகரி)

பரந்தன் இந்து ம. வி. யை மூலாதாரப் பாடசாலையாக வைத்து ஏழு பாடசாலைகளை உள்ளடக்கிய கிளிநொச்சி மாவட்ட ஒன்பதாவது கொத்தணி உருவாக்கப்பட்டுள்ளது.

இக்கொத்தணி அமைப்பை கிளிநொச்சி மாவட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. எஸ். வேலாயுதம் ஆரம்பித்து வைத்தார். ஏழு பாடசாலைகளை உள்ளடக்கிய பரந்தன் கொத்தணி அதிபராகத் திரு. எஸ் புண்ணியசீலன் நியமிக்கப்பட்டுள்ளார். இவ் ஆரம்ப விழாவில் கொத்தணி அமைப்புக்குட்பட்ட பாடசாலை அதிபர்களும் பெருந்தொகையான பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.

## சுவையான செய்திகள்

## ஜூலியட்டைப்பிடிக்க அந்த ரோமியோவால் முடியவில்லை

சமீபத்தில் புது டில்லி ரயில்நிலையத்தில் ஒரு விழிப்புணர்வு கொண்ட குடிமகன், கிளம்பிச் சென்ற எகஸ்பிரஸில் வெடிகுண்டு இருப்பதாக அலறி பொலிசாரை அழைத்தார். ரயில்வே அதிகாரிகள் உடனடியாகவாரிச் சுருட்டிக் கொண்டு நடவடிக்கையில் இறங்கினார்கள். பாதி வழியில் ரயில் நிறுத்தப்பட்டது ரயில் முழுவதும் அலசிப் பார்த்தும் வெடிகுண்டு கிடைக்கவில்லை. போலிஸ்காரர்கள் தகவல் தந்த ஆர்வலரைக் கேள்விகளால் துளைத்து எடுத்தார்கள். துண்டு துண்டாக வெளிவந்த உண்மை இதுதான்: தகவல் தந்தவர் ஒரு ரோமியோ. அவரது ஜூலியட் ஏறிச் சென்ற ரயிலை இவரால்பிடிக்கமுடியவில்லை. உடனே வெடிகுண்டுப்புரளியை அவிழ்த்து விட்டார். பொலிஸார் அவரைக்கைது செய்தனர் காதலியிடம் சென்று சேரும் அவரின் திட்டம் தற்காலிகமாகத் தடம் புரண்டது.

## பக்கத்துவீட்டில்என்னசமையல் மோப்பம்பிடிக்க 'மூக்கு' தயார்

இங்கிலாந்தில் மான்செஸ்டர் பல்கலைக் கழகத்தின் விஞ்ஞானத் தொழில் நுட்பக் கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் செயற்கை மூக்கொன்றை உருவாக்கியிருக்கிறார்கள். பல்வேறு வாசனைகளை மோப்பம் பிடித்து, இனம் பிரித்து அடையாளம் காட்ட இந்தச் செயற்கை மூக்குப் பெரிதும் உபயோகமானதாம். தற்போதைக்கு இது இருபது விதமான வாசனைகளைக் கண்டறியக் கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. போகப்போக இன்னும் பல வாசனைகளை அடையாளம் காட்டும் அளவுக்கு அபிவிருத்தி செய்யமுடியும் என்கிறார்கள். உணவுப் பொருள் தயாரிப்புத் தொழிலிலும், விஷ வாயுக்களைக் கண்டறியும் துறையிலும் இந்த மூக்கும் பெரிதும் பயன்படுமாம். பக்கத்து வீட்டுச் சமையலை மோப்பம் பிடித்து நாக்கைச் சப்புக் கொட்டும் நமது சாப்பாட்டு ராமன்களுக்கு இது ஒரு வரப்பிரசாதம் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

## ஆங்கில ஆசிரியர் நியமனம் விரைவில் நடத்தத் தீர்மானம்

(கொழும்பு)

நாட்டில் உள்ள பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர்களை நியமிக்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. விரைவில் இதற்கான விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளன.

பல் பாடசாலைகளிலும் ஆங்கில ஆசிரியர்களுக்கு தற்போது பற்றாக்குறை நிலவிவருகிறது அத்துடன் ஆங்கிலத்தை அரசு கட்டாய பாடமாக்கியிருப்பதாலுமே இந்த நியமனத்தை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

க. பொ. த உயர்தர வகுப்பில் ஆங்கில பாடத்தில் சித்தியெய்தியவர்களுக்கே புதிய நியமனத்தில் முன்னுரிமை வழங்கப்படவுள்ளது


## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்

SPOKEN ENGLISH with GRAMMAR

(தொழில் புரிபவர்களுக்கான மாலைநேர வகுப்புக்கள்)

ஆரம்பம்: 25-02-90 (4 மணி)

பகல்நேர வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன

02159



தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம் (வரைவுள்ளது).

## விலைக் கூறு கோரல்

(கிறே பப்ளின்)

எமது சங்கத்தின் மின்தறி நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்ட 37½ அங்குல அகலமுடைய கிறே பப்ளின் துணி 15000 மீற்றர் உடனடியாக விற்பனைக்குண்டு. மேற்படி துணியின் ஒரு மீற்றருக்கான விலைக் கூற்றைக் கோரிப் பதிவுத் தபால் மூலம் அல்லது சீல் முத்திரையிடப்பட்ட கடிதமூலம் பொது முகாமையாளர், ப. நோ. கூ. சங்கம் தெல்லிப்பழை என்ற முகவரிக்கு 27. 02. 1990 செவ்வாய்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னர் கேள்விப்பத்திரப் பெட்டியில் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

துணியினைப் பார்வையிட விரும்பின், சங்கத்தின் தலைமையலுவலகத்தில் வேலை நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

1990. 02. 12.

பொது முகாமையாளர்.

02145

# உலகம் பூராவும் நமது வசம்

கர்நாடகத்தில் 90 லட்சம் தமிழர் உள்ளனர். பல தமிழ்ப் பத்திரிகைகளும் அங்கு உள்ளன. கேரளத்தில் 6லட்சம் தமிழர்கள் இருக்கிறார்கள். திருவனந்தபுரத்திலிருந்தும் சில தமிழ் இதழ்கள் வருகின்றன. புதுடில்லியில் இப்பொழுது 3 லட்சம் தமிழர்கள் உள்ளனர். மத்திய அரசில் பல பெரிய பதவிகளில் உள்ளவர்களும் தமிழரே. ஜனாதிபதி வெங்கட்ராமனும் தஞ்சாவூர்த் தமிழர்தான். மேற்கு வங்காளத்தில் தமிழர்கள் இலக்கியச் சங்கம் வைத்துள்ளனர். 'லேக்ரோடு' என்ற பகுதி கவிபாரதி சாரணி, எனப் பெயர் மாறியுள்ளது. கனடாவில் லட்சக்கணக்கில் தமிழர் உள்ளனர். 'தமிழ் மணம்' என்ற பெயரில் ஒரு பத்திரிகை வருகிறது. பிரிட்டனிலும் ஆயிரக்கணக்கில் தமிழர்கள் உள்ளனர். நூலகமொன்றில் 32 ஆயிரம் தமிழ்நூல்களும் உள்ளன. சிங்கப்பூரில் தமிழர்கள் நிறைய உள்ளனர். 30. 390 மாணவர்கள் இங்கு தமிழ் கற்று வருகின்றனர். 1887 - ல் 'சிங்கை நேசன்', 1876 - ல சிங்கை வர்த்தமானி மற்றும் தமிழ் முரசு, சீர்திருத்தம், முன்னேற்றம், தமிழன், ஜோதி என்ற பெயர்களில் பல சீர்திருத்தப் பத்திரிகைகள் வந்துள்ளன. பிஜித்தீவில் 10 ஆயிரம் தமிழர்கள் உள்ளனர். பல சமயத்தொடர்பான சங்கங்களும் இங்கு உள்ளன. தமிழர் பண்டிகைகள் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. நாற்பதுக்கும் மேற்பட்ட தமிழ்க்கோயில்கள் இங்கு உள்ளன. ஆஸ்திரேலியாவில் சிட்னி தமிழ்ச் சங்கம் 'சந்திப்பு' என்ற பெயரில் ஒரு தமிழ் இதழை நடத்துகிறதாம். ஏராளமான தமிழர்கள் இங்கு உண்டு. இப்படியாக உலகம் பூராவும் தமிழர்கள் உள்ளனர்.

# இன்று நாள் எப்படி?

மேடம்; உயர்பதவி, வாகன சுகம், வணிகர்கள். கடல் தொழில் செய்வோர் இலாபம், தேடியவர் வருகை.

இடபம்: வாக்குப்பலிதம், உயர் பதவி, தேடியவர் வருகை, வெளியூர் பிரயாண நிவர்த்தி, இலட்சுமி கடாச்சம்.

மிதுனம்: சுகஜீவியம், பொருள் செலவு, விவாகத்தடை, வெளியூர் போனவர்கள் வருகை, வணிகர்கள் இலாபம்.

கடகம்: விவாக நிச்சயம், பொருள் செலவு, உயர்பதவி, பெண்களாலுதவி, இலட்சுமி கடாச்சம்.

சிங்கம்: உடல் ஒட்டிடரோகம், பெரியோராசி, வாகன மாற்றம், மனை பூமியால் நன்மை.

கன்னி: வாக்குப்பலிதம், வணிகர்கள், கடற் தொழில் செய்வோர் இலாபம், கலைஞர்கள் கௌரவிக்கப்படல்.

துலாம்: மாதாவழியுதவி, வாகன மாற்றம், உயர்பதவி மூலம் இடமாற்றம், பெண்களாலுதவி.

விருச்சிகம்: இலட்சுமி கடாச்சம், உயர்பதவி, வாகனசுகம், இளைய சகோதர வழியுதவி, புதுத்தொழில்.

தனுசு: விவாக நிச்சயம், வாக்குப்பலிதம், வணிகர்கள் கடற்தொழில் செய்வோர் இலாபம்.

மகரம்: பெண்களாலுதவி, பெரியோராசி, புண்ணியவழிபாடு, புத்திரசுகம், இருதொழில் இலாபம்.

கும்பம்: வாக்கு கலகம், வணிகர்கள், கடற்தொழில் செய்வோர் இலாபம், வெளியூர் போனவர்கள் வருகை.

மீனம்; உயர்பதவி, வாகன இலாபம், இராஜமரியாதை, உடன் பிறந்தோரால் நன்மை, வாக்கு வசீகரம், வணிகர்கள் இலாபம்.

★ யாழ் சோதிடர்
ச.அரியநாயகம்

# வர்த்தகர் தரும் பணத்தை அமைச்சர்கள் ஏற்கக்கூடாது

[புதுடில்லி]

தேர்தல் பிரசாரத்திற்காக வர்த்தகர்கள் பணம் தந்தால் அதை ஏற்கவேண்டாம் என இந்தியப் பிரதமர் திரு. வி. பி. சிங் தமது அமைச்சர்களுக்கு அறிவித்துள்ளார்.

அரசில் [illegible] அமைச்சர்களாகப் பதவி வகிப்பவர்கள் மேற்படி பணம்வாங்குவதன் மூலம் எந்தவொரு வர்த்தகருக்கும் கடமைப்பட்டவர்களாக தங்களை ஆக்கிக்கொள்ளக்கூடாது என அமைச்சர்களுக்கு எழுதியுள்ள கடிதங்களில் வி. பி. சிங் குறிப்பிட்டுள்ளார்.


## உடனடி வேலை வாய்ப்புக்கள்

★ ஓமான் — டீசல் மெக்கானிக்
★ சவூதி — வெல்டேர்ஸ்
காப்பென்ரேர்ஸ்
கிளீனேர்ஸ்

16 வயதுக்குட்பட்டவர்கள் ஜேர்மனி உடனடி பயணத்திற்கு தொடர்பு கொள்ளவும்

HELAN TRAVELS
37/7, STANLEY ROAD, JAFFNA.

02134


மணிப்பூர் சிக்கலான தேர்தல் முடிவு

# ஆளுநர் ஆட்சி நடைபெறமாட்டாது

# மத்திய அமைச்சரவை முடிவு

இந்திய மணிப்பூர் மாநில சட்டப் பேரவை தேர்தலில் இந்திரா காங்கிரஸ் கட்சியும் எதிர்க்கட்சிகளின் கூட்டணியும் சம அளவான ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளதால் அம்மாநிலத்தில் யார் ஆட்சி அமைப்பது என்பதில் சிக்கல்கள் தோன்றியுள்ளன.

ஆளுநர் ஆட்சியை அமுல் நடத்தும்படி சிபார்சுகள் செய்யப்பட்ட போதிலும், மத்திய அமைச்சரவை ஆளுநர் ஆட்சியை அமுல் செய்வதில்லை என முடிவு செய்துள்ளது. இதற்கிடையே மணிப்பூர் மாநில முதல்வரான திரு. ஜெய்சந்திரசிங் பதவியிலிருந்துள்ளார் தேர்தல் முடிவுகள் முற்றாக அறிவிக்கப்பட்டுப் புதிய அரசு கையேற்கும் வரை தொடர்ந்து பதவியில் இருக்குமாறு இவரை மாநில ஆளுநர் கேட்டுக்கொண்டுள்ளார்.

வாக்குச் சீட்டுக்கள் எரிக்கப்பட்டதையடுத்துப் பன்னிரண்டுபகுதிகளில் மறுவாக்குப் பதிவுக்கு உத்தரவிடப்பட்டமையும் இங்கு குறிப்பிடத் தக்கது.

விடுதலையான மண்டேலா அறிவிப்பு

# வெள்ளையர்கள் கறுப்பர்களுக்கு அஞ்சவேண்டிய அவசியமில்லை

தென்னாபிரிக்க வெள்ளையர்கள் கறுப்பர்களைப் பார்த்து அஞ்சத்தேவையில்லை எனவும் இங்கு இனவாதத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் போது கறுப்பர்கள் வெள்ளையர்கள்மீது ஆதிக்கம் செலுத்த மாட்டார்கள் என்றும் தென்னாபிரிக்கக் கறுப்பினர்கள் தலைவர் திரு நெல்சன் மண்டேலா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் எமக்குஉரிமைகள் கிடைப்பதனால் வெள்ளையர்கள் மீது கறுப்பர்கள் ஆதிக்கம் செலுத்துவார்கள் என்று அர்த்தமில்லை. அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் மூலமே எமதுரிமையை நாம் பெறவுள்ளோம். எமது இயக்கத்தில் தீவிரவாதிகள் இல்லை என்று தெரிவித்தார்.

ஆப்-முஜாகுதீன் கிளர்ச்சியாளர்களுக்கு

# உணவு விநியோகத்தை அமெரிக்கா நிறுத்தியது

கடந்த மூன்று மாதகாலத்திற்குள் இரண்டாவது தடவையாக அமெரிக்கா ஆப்கான் முஜாகுதீன் கிளர்ச்சியாளர்களுக்கு உணவு உதவியை நிறுத்திக்கொண்டுள்ளது.

உணவு விநியோகத்தை மேற்பார்வை செய்யும்பாகிஸ்தான் இராணுவமும் ,வேவு பார்க்கும் எஜென்சியும் 2400 தொன் கோதுமையை திருடியதாக அமெரிக்க பத்திரிகைகள் செய்திவெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# கட்டுத்துவக்கில் சிக்கி சிறுமி பலி

கட்டுத்துவக்கில் சிக்கியதால் 'வவுனியா குஞ்சுக்குளத்தைச் சேர்ந்த சிறுமியொருத்தி மரணமானாள். எஸ். சிவராணி(வயது 13) என்ற பெயருடைய இந்தச் சிறுமி வயலுக்குச் சென்ற வழியிலேயே இச் சம்பவம் நேர்ந்தது.

விடுதலைப்புலிகள் போராளிகளால் உடனடியாக வவுனியா ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டு அங்கு வைத்தே சிறுமியின் மரணம் சம்பவித்தது.

# மகா சிவராத்திரி சமய அறிவுப்போட்டி

எதிர்வரும் மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு திருக்கேதீஸ்வரம் மகா சிவராத்திரி மட பரிபாலன சபையினரால் சமய அறிவுப்போட்டி ஒன்று நடாத்தப்படவுள்ளது

பாடசாலைகளுக்கிடையிலே நடாத்தப்படவுள்ள இந்த சமய அறிவுப் போட்டி பற்றிய விபரங்களைக் கொண்ட சுற்று நிருபம் சகல பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இப்போட்டி இம்முறை மன்னார் மாவட்டத்தில் நடைபெறவுள்ளது. அடுத்து வரும் காலங்களில் மற்றைய மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்படவுள்ளதாக பரிபாலன சபை தலைவர் திரு. தி. இராசநாயகம் தெரிவித்தார்.

# புதிய கிளை

(தாளையடி)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் குடாரப்பு கடற்கரை கிராமத்தில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக்கிளை ஒன்றினை அமைக்கும் நடவடிக்கைகளை வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் செய்து வருகிறது,

# 31-ம் நாள் நினைவஞ்சலி

(19-02-1990)



## அமரர் மயில்வாகனம் பொன்னையா

மண்ணுலகு: 27 - 04 - 1915
விண்ணுலகு: 20 - 01 - 1990

1942- ஆம் ஆண்டு நாவற்குழியில் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட நாவற்குழி ஐக்கிய நாணய சங்கத்தின் ஸ்தாபக உறுப்பினரும், இரண்டு ஆண்டுகளின்பின் நாணய சங்கங்களின் உயிர் மூச்சாக விளங்கும் பதவியான பொருளாளர் பதவியை அன்று தொடக்கம் 1989 - ஆம் ஆண்டு வரை செவ்வனே வகித்து சங்கத்தின் வளர்ச்சிக்கு அயராது பணியாற்றி சங்கப் பொறுப்புகள் அத்தனையையும் தாமே தாங்கி 'தாமே சங்கம்' 'சங்கமே தாம்' என்று உறுப்பினர் மகிழும் வண்ணம் அயராப் பணி புரிந்த அன்னாருக்கு நாவற்குழி ஐக்கிய நாணய சங்க உறுப்பினர் அனைவரும் கண்ணீர் அஞ்சலி செலுத்துகின்றனர்.

நாவற்குழி ஐக்கிய நாணய சங்கம்

02195

ஒரு மாத காலத்துள்

## தேசிய அடையாள அட்டை யாழ் செயலகம் விநியோகம்

ஆட்பதிவுதிணைக்களத்தினால் வழங்கப்பட்டு வரும் தேசிய அடையாள அட்டை வேலைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளது. யாழ். செயலகத்தில் இருந்து அனுப்பப்படும் விண்ணப்பங்களுக்குமுன்னர் மூன்று மாதங்களின் பின்னரே அடையாள அட்டை அனுப்பி வைக்கப்பட்டு வந்தது.

ஆனால் இப்போது கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் இவ் வேலைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதால் ஒரு மாதத்திற்குள் இவ் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

## வீரமரணமடைந்த புலிகளுக்கு மாங்குளத்தில் சிலை அமைப்பு

(மாங்குளம்)

மாங்குளத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி போராளிக்கு சிலை அமைக்கப்படவுள்ளது.

கடந்த வருடம் பிற்பகுதியில் ஏற்பட்ட மோதலில் சிரேஷ்ட போராளி வண்ணன் மாங்குளத்தில் வீரமரணமடைந்ததையிட்டு அவருக்கு சிலை அமைக்கும் நடவடிக்கைகளை மாங்குளம் வர்த்தகர்கள் பொது மக்கள் இணைந்து செயற்பட்டு வருகின்றனர்.

அரசியல் கட்சி மக்கள் முன்னணி கொடி மாங்குளத்தில் வைபவ ரீதியாக ஏற்றி வைக்கப்பட்டது. விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினரின் வேண்டுகோளுக்கிணங்க நகரப் பகுதிகளில் சுகாதாரம் பேணும் நடவடிக்கைகளில் வர்த்தகர்கள் ஈடுபட்டு வருகின்றனர். நகரம் சுத்தமாக வைத்திருப்பதோடு, வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக குப்பைகளை சேகரிக்கும் பாத்திரங்களும் வைக்கப்பட்டுள்ளன

# புலிகளின் போராட்டம் மக்கள் போராட்டம்

-பாப்பா

எமது போராட்டத்தை மாபெரும் மக்கள் போராட்டமாக மாற்றும் எண்ணத்துடனே விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணி என்னும் கட்சி ஆரம்பிக்கப்பட்டது. எமது போராட்டத்தின் கோலம் சிறிது மாறுபட்டாலும் முடிந்த முடிபு தன்னிகரற்ற தமிழீழமே. எமது போராட்டம் உலக மக்களால் போற்றப்படுவதற்குக் காரணம் எமது உறுதியான தலைமைத்துவமும் சுயநலமில்லாத தன்மையுமே யாகும் எமது போராட்டத்தில் மக்கள் அளித்த அளப்பரிய பங்கும், அவர்களின் இழப்புகளுமே முக்கியமானவையாகும்.

இவ்வாறு பளைச் சந்தை மைதானத்தில் இடம் பெற்ற கப்டன் சிவா, வீரவேங்கை அன்ரன் ஆகியோரது அஞ்சலிக்கூட்டத்தில் உரையாற்றிய தென்மராட்சிப்பிரதேச விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணி அமைப்பாளரும், அரசியல் பொறுப்பாளருமான திரு. கி. பாப்பா உரையாற்றுகையில் தெரிவித்தார்.

இக்கூட்டம் பச்சிலைப்பள்ளி பிரதேச அரசியல் அமைப்பாளர் செல்வராசா தலைமையில் நடைபெற்றது இக்கூட்டத்தில் தென்மராட்சிப் பகுதி மாணவர் இளைஞர் அமைப்புப் பேரவை பொறுப்பாளர், திரு. ப. அரியரத்தினம் போன்ற பலபிரமுகர்கள் அஞ்சலியுரை நிகழ்த்தினர்கள்

## வல்வைப் பிரஜைகள் குழு இம்மாதம் கலைக்கப்படுகிறது

(உடுப்பிட்டி)

கடந்த நெருக்கடியான காலங்களில் மக்களுக்கும் இராணுவத்திற்கும் ஒரு பாலமாகவும் மக்களின் நலனில் அக்கறை கொண்டு அளப்பரிய சேவைகள் ஆற்றிய எஸ். செல்வேந்திரா தலைமையிலான வல்வைப் பிரஜைகள் குழு இம் மாதத்துடன் கலைக்கப்படுகின்றது.

வல்வை மகளிர் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற வல்வைப் பிரஜைகள் குழு கலை, கலாசார விழாவின் போது திரு எஸ். செல்வேந்திரா இதனை தெரிவித்தார்.

## கிழக்குபல்கலைக்கழகம் பிரிட்டிஷ் உதவி

கிழக்குப் பல்கலைக் கழகம், திறந்த பல்கலைக் கழகத்தின் விஞ்ஞானபீடம் ஆகியவற்றின் அபிவிருத்திக்கு தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்கத் தாம் தயாராக இருப்பதாக பிரிட்டிஷ் கவுன்சிலின் தலைவர் சேர் டேவிட் குறிப்பிட்டார்'

## வாசகர் கேள்வியும் புலிகளின் பதிலும்

தற்போதைய புதிய அரசியல், சமூக நிலைமைகள் தொடர்பான முரசொலி வாசகர்களின் கேள்விகளுக்குத் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர் ஒருவர் பதிலளிகக வுள்ளார். எனவே வாசகர்கள் தாங்கள் கேட்க விரும்பும் கேள்விகளை எழுதி கேள்வி - பதில், முரசொலி, 62ஏ, ஆர். ஜி. பில்டிங், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு அனுப்பவும்.

### ஒரே நாளில்...

நாய்கள் இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டன. கிளிநொச்சி பகுதியில் அண்மைக் காலமாக விசர் நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளதாலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### ஆசிரியர்...

தவர்களும், நாளை மறுதினம் இருபத்தொராம் திகதி காலை பூநகரி, பச்சிலைப்பள்ளி உதவி அரச அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களும் கிளிநொச்சி கல்வி திணைக்களத்திற்கு சமுகம் அளிக்கும்படி கிளிநொச்சி பிரதி கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார்,

கிளிநொச்சியில்நடைபெற்ற நேர்முகப் பரீட்சையில் முறைகேடுகள் இடம்பெற்றதாகவும் அது தொடர்பாக உடன் விசாரணை மேற்கொள்ளும்படியும் ஐ. தே. க. அமைப்பாளர் திரு. கே. சண்முகசுவாமி ஜனாதிபதி, கல்வியமைச்சர், பாதுகாப்பு அமைச்சர் ஆகியோருக்கு அவசர தந்தி அனுப்பி வைத்துள்ளதாக நேற்றைய முரசொலியில் செய்தி வெளியானது குறிப்பிடத்தக்கது.

### முரசொலி...

தோடு நன்றியும் தெரிவித்துள்ளார்.

'முரசொலிக்கு வந்த கடிதம்' பகுதியில் வெளியான மேற்படி கல்லூரி உயர்வகுப்பு மாணவர்களின் கடிதத்திற்கு மதிப்பளித்து தாவடியைச் சேர்ந்த ஏ. கே. சுதாகரன், கோண்டாவிலைச் சேர்ந்த ஐ. ஜி. சுதாகரன் ஆகியோர் முரசொலி மூலமாக வழங்கிய ஆயிரத்தி நானூறுரூபா நிதி உதவி நேற்று வித்தியானந்தாக் கல்லூரி நிருவாகிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

''முல்லை மாவட்டத்தைப் பிறப்பிடமாகவோ அல்லது மேற்படி கல்லூரியின் பழைய மாணவர்களாகவோ இல்லாத நிலையிலும் தமது மாணவர் படும் கஷ்டத்தை அறிந்து இவர்கள் செய்த உதவியை நன்றியோடு பாராட்டுவதாகத் தெரிவித்தார்.

### இனறு யாழ்

என இலங்கை மின்சாரசபை அத்தியட்சகர் அறிவித்துள்ளார்.

வாதரவத்தை அறுந்த மின் கம்பிகளின் திருத்த வேலைகள் நடைபெறவுள்ளதால் இந்தத் தடை ஏற்படுகிறது.

### வடமராட்சி...

லியடி, நவிண்டில், மண்டான் ஆகியன தடுத்துவைக்கப்பட்ட இளைஞர்கள் விடுவிக்கப்பட்டதும் சில தினங்களில் விலக்கிக் கொள்ளப்படுவார்கள் என பிரிகேடியர் டி பி சிங், லேணல் சர்மா ஆகியோர் வல்வெட்டித்துறை பிரஜைகள் குழுவிடம் தெரிவித்துள்ளனர்.

மூடப்பட்ட முகாம் பகுதிக்குள் பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு பொதுமக்கள் எவரும் உட்செல்ல வேண்டாமென தமிழீழ விடுதலைப் புலிகள் வேண்டியுள்ளனர்.

### புலிகளை...

பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

பேச்சுவார்த்தைகளையடுத்து செய்தியாளர்களிடம் பேசிய முதலமைச்சர் கருணாநிதி விரைவில் இலங்கையில் அமைதி ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகள் ஏற்பட்டுள்ளன எனத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து பேசுகையில் விடுதலைப் புலிகளுடன் இருதடவை பேச்சுக்கள் நடாத்தியுள்ளேன் அவர்களின் கருத்துகளை ஏனைய குழுக்களுக்கு தெரியப்படுத்தியுள்ளேன். ஏனைய தமிழ்க் குழுக்களின் கருத்துகளும் விடுதலைப் புலிகள் தரப்பினருக்கு தெரிவிக்கப்பட்டது என்றார்.

எனினும் இரு தரப்பினர்களும் தெரிவித்த கருத்துகள் பற்றி கூற முதலமைச்சர் கருணாநிதி மறுத்துவிட்டார். வட, கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல், போட்டிக் குழுக்களிடையிலான மோதல் என்பவை குறித்தே முக்கியமாக ஆராயபபட்டதாக அவர் தெரிவித்தார்.

கடந்த மூன்று நாட்களாக நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் விபரங்களை இந்தியப் பிரதமருக்கும், வெளியுறவு அமைச்சர் குஜ்ராலுக்கும் தெரிவிப்பதற்காக அமைச்சர் முரசொலிமாறன் இன்று அல்லது நாளை டில்லிபயணமாகிறார்.

### திங்கள், வெள்ளி...

பி.ப. 2.00 மணி வரைநடாத்தப்பட வேண்டும். பாடசாலை நேரங்களில் மாற்றங்கள் வரும் போது வகுப்பு நேரங்களிலும் மாற்றங்கள் செய்யப்படலாம்.

க. பொ. த. மாணவர்கள் எல்லாப் பாடங்களையும் ஒரே நிறுவனத்திலேயே கற்கவேண்டுமென வற்புறுத்தக்கூடாது. மாணவர்கள் தாம் விரும்பிய பாடங்களைத் தெரிவு செய்து கற்பதற்குச் சுதந்திரம் வழங்கப்பட வேண்டும்.

மாணவர்களிடம் நியாயமான கட்டணங்களையே அறவிடவேண்டும். க. பொ. த. (சாதாரண) மாலைநேர வகுப்பு மாணவர்களிடம் 70 ரூபாவும் பகல் நேர வகுப்பு மாணவர்களிடம் 90 ரூபாவும் கட்டணமாக அறவிடலாம் க. பொ. த. (உயர்தர) மாலைநேர வகுப்பு மாணவர்களிடம் 100ரூபாவும் பகல்நேர வகுப்பு மாணவர்களிடம் 120 ரூபாவும் கட்டணமாக அறவிடலாம். மேற்கூறிய கட்டணங்களை விட மேலதிக கட்டணங்கள் எதனையும் எக்காரணங் கொண்டும் அறவிடக் கூடாது.

3 மாத 6 மாத முழுக் கட்டணங்களை முற்பணமாக அறவிடக் கூடாது.

அரசாங்க கூட்டுத்தாபன ஊழியர்கள் தமது கடமை நேரங்களில் தனியார் கல்வி நிறுவனங்களில் கற்பிக்கக் கூடாது.

மாணவர்களுக்கு வகுப்பறைகள் போதியளவு இடவசதி உள்ளதாக அமைத்துக் கொடுப்பதோடு குடிநீர்வசதி மலசலகூட வசதி என்பனவும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும்.

மேற்கூறிய தீர்மானங்கள் அனைத்தும் மார்ச் முதலாம் திகதி தொடக்கம் வடபகுதியில் உள்ள அனைத்து தனியார் கல்வி நிறுவனங்களினாலும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

அடுத்த தனியார் கல்வி நிலைய ஒன்றியப் பொதுக் கூட்டத்தில் சகல தனியார் கல்வி நிலைய ஆசிரியர்களும் அங்கத்தவர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவதோடு புதிய நிர்வாக சபையும் தெரிவு செய்யப்படும்.

### இலங்கை

திலுள்ள எல்லோருக்கும்நியாயமான நீதியான சமவாய்ப்புக்களை ஏற்படுத்துகிறது இதனால் பல்வேறு அரசியல் கட்சிகளும் குழுக்களும் அங்கம் வகிக்கக் கூடியதாக இருக்கிறது. 1987ல் இப்பிரச்சினையைத் தீர்த்து வைக்க முயன்றபோது மற்றொரு பிரச்சினை உருவாகியது. இதனால் அப்போது கைச்சாத்திடப்பட்ட உடன் படிக்கையை தான் ஆதரிக்கவில்லை எனவும் ஜனாதிபதி விளக்கிக் கூறினார். ஆனால் சிலர் குறுக்கு வழியில் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ள அந்த உடன்படிக்கையைப்பயன் படுத்தியதாகவும், அவர்கள் முழுத் தேசத்தையுமே கொழுந்து விட்டெரியச் செய்துவிட்டார்கள் அத்தியை அணைக்கக்கூடிய அசைக்கமுடியாத ஆற்றல் தன்னிடம் இருப்பதாலேயே அந்த நெருக்கடியான காலகட்டத்திலும் தான் பதவியேற்றதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

### வானொலியில் கலந்து...

ளோம். ஜனவரி முதல் புதிய எழுத்தாளர்களை நாம் இனம் கண்டு ஊக்குவிக்கின்றோம். இப்போது நல்லதொரு சூழ்நிலை உருவாகியுள்ளது. வடபகுதி எழுத்தாளர்கள். கலைஞர்கள் கொழும்புவரும்போது தமிழ் சேவையில் கலந்து கொள்ளவேண்டும் அவர்களுக்காக தமிழ்ச்சேவை கதவு எப்போதும் திறந்து இருக்கும்.

இவ்வாறு இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபன தமிழ்ச் சேவை பணிப்பாளர் திரு. திருஞானசுந்தரம் கூறினார். நேற்று ரக்ஸனமந்திரிய கட்டடத்தில் 14 வது மாடியில் நடைபெற்ற சோமகாந்தனின் விடிவெள்ளி பூத்தது நூல் அறிமுக விழாவில் உரையாற்றுகையில் இவ்வாறு கூறினார். அவர் மேலும் பேசுகையில்;

வானொலி மூலம் தமிழ் கலாசாரம் வளர நாம் முயற்சி எடுக்கவேண்டும். இதற்குத் தமிழ் கலைஞர்கள் ஒத்துழைக்க வேண்டும் என்றார். இந்து கலாசார ராஜாங்க அமைச்சது திரு. தேவராஜ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்


## தேவை

**அச்சுக்கோப்பாளர்கள்**

அனுபவமுள்ள அச்சுக்கோப்பாளர்கள் உடன் தேவை அனுபவத்திற்கும் திறமைக்கும் ஏற்ற சம்பளம் வழங்கப்படும். நேரில் வரவும்.

**பயிலுநர்கள்**

அச்சுக்கோப்பாளர்களாகப் பயில விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கல்விச் சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

பொதுமுகாமையாளர்
முரசொலி பப்ளிஷர்ஸ் பிரைவேட் லிமிற்றெட்
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ், [பிறைவேட்] லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாண ஸ்ரான்லி வீதி 62ஏ இலக்கத்திலுள்ள அச்சகப் பிரிவில் 19-02-1990ல் அச்சிட்டு வெளியிடப்பெற்ற தி